இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 347 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 11 – வியாழக்கிழமை 27 ஜூலை 2023 – மதுரை 12+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 347 : Thiruvalluvar Year - 2054 - Aadi 11 - Thursday 27 July 2023 - Madurai 12+12 Pages ₹ 5.00


### வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் இன்று

# திருச்சியில் “வேளாண் சங்கமம் 2023” மாபெரும் கண்காட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!



**திருச்சி, ஜூலை 27-**

**வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் “வேளாண் சங்கமம் 2023” மாபெரும் கண்காட்சியை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.07.2023) திருச்சியில் தொடங்கி வைக்கிறார் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:-

விவசாயிகளின் நலனுக்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை கடந்த மூன்று ஆண்டுகளாக அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், பல்வேறு கண்காட்சிகள் நடத்தப்படும் என 2023 - 24 ஆம் ஆண்டு வேளாண்மை உழவர் நலத்துறையின் மானியக்கோரிக்கையில் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதன்முறையாக, தமிழ் நாட்டில் வேளாண் வணிகத் திருவிழா சென்னையில் 08.07.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்த பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட விளைபொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, பெருவாரியான சென்னை வாழ்மக்களும், வேளாண் பெருமக்களும் பங்கேற்று பயனடைந்தனர்.

**திருச்சியில் மூன்று நாட்கள் வேளாண் சங்கமம்**

வேளாண்மை, தோட்டக்கலை தொடர்பான புதிய தொழில்நுட்பங்கள், அரசின் திட்ட உதவிகள், பழக்கன்றுகள், காய்கறி விதைகள் விற்பனை உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு, ஜூலை 27 முதல் ஜூலை 29 வரை திருச்சிராப்பள்ளி, கேர் பொறியியல் கல்லூரியில் “வேளாண் சங்கமம் - 2023” விழாவினை சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.7.2023) வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்த உள்ளார்கள். தொடர்ந்து, நடப்பாண்டில் விவசாயி களுக்கு 50 ஆயிரம் புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கும் நிகழ்ச்சியினையும் துவங்க இருக்கிறார்கள்.

**வேளாண் சங்கமத்தின் சிறப்பம்சங்கள்**

வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்களில் உயர் விளைச்சல் தரும் புதிய இரகங்கள், பாரம்பரிய நெல் இரகங்கள், நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான செயல் விளக்கங்கள், புதிய வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தி மூலம் இயங்கும் கருவிகள், விளை பொருட்களை மதிப்புக் கூட்டுவதற்கான வழிமுறைகள், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு குறித்தான கருத்தரங்குகள், உழவன் செயலி பதிவிறக்கம், அரசின் திட்டப்பலன்களை பெறுவதற்கு முன் பதிவுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்கள் இடம் பெறுகின்றன.

**கலந்து கொள்ளும் துறைகள்**

இக்கண்காட்சியில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை, வேளாண் பொறியியல், சர்க்கரைத்துறை, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), கைத்தறி, தமிழ்நாடு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### கர்நாடகாவில் பலத்த மழை! மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

*பெங்களூரு, ஜூலை 27-*

*கர்நாடகத்தில் தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைகளும் வேகமாக நிரம்புகிறது. கனமழையால் அணைக்கு மீண்டும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.*



*இந்நிலையில், கர்நாடக அணைகள் வேகமாக நிரம்பி வருவதால் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் நீர் திறப்பு விநாடிக்கு 5,067 கன அடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.*

*கபினி அணையிலிருந்து 23,000 கன அடி நீரும், கே.ஆர்.எஸ். அணையிலிருந்து 2,500 கன அடி நீரும் திறக்கப்படுகிறது.*

*கிருஷ்ணராஜசாகர் அணைக்கு காலை நிலவரப்படி நீர்வரத்து விநாடிக்கு 29,552 கன அடியாக உள்ளது. கபினி அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 20,749 கன அடியாக உள்ளது.*

*காவிரி ஆற்றில் நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் இந்த தண்ணீர் அகண்ட காவிரியாக தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதனால் குறைந்து வரும் மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.*

### இந்தியாவின் மக்கள்தொகை 139 கோடி!

புதுடெல்லி, ஜூலை 27–

கடந்த 1ந் தேதி நிலவரப்படி, இந்தியாவின் மக்கள்தொகை 139 கோடி என்று மதிப்பிடப்பட்டு இருப்பதாக மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற மக்களவை கேள்வி நேரத்தில் ஒரு கேள்விக்கு ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் கூறியதாவது: –

கடந்த 1ந் தேதி நிலவரப்படி, இந்தியாவின் மக்கள்தொகை 139 கோடியே 23 லட்சத்து 29 ஆயிரம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றிய மக்கள்தொகை மதிப்பீட்டுக்கான தொழில்நுட்ப குழுவின் அறிக்கையை ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் தேசிய மக்கள்தொகை ஆணையம் வெளியிட்டுள்ளது. அதுபோல், கடந்த 1ந் தேதி நிலவரப்படி, சீனாவின் மக்கள்தொகை 142 கோடியே 56 லட்சத்து 71 ஆயிரம் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளது.

### மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் பதிலில்லை! ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் சார்பில்

# மக்களவையில் மோடி அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தாக்கல்!

## விவாதத்திற்கு ஏற்பதாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவிப்பு!

*புதுடெல்லி, ஜூலை 27-*

*நாடாளுமன்ற மக்களவையில் மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்காததால் மோடி அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் கொண்டு வந்தன. இந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் விவாதத்திற்கான தேதியை ஆலோசித்தபின் அறிவிப்பதாகவும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார்.*

*நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடர் கடந்த 20ந்தேதி தொடங்கியது.*

*ஆனால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரை திட்டமிட்டபடி நடத்த முடியாத அளவுக்கு மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதித்திட ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் வலியுறுத்தின.*

*இதற்கிடையே பிரதமர் மோடியை மணிப்பூர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க செய்யும் வகையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவது தான் ஒரே வழி என்ற முடிவை ‘இந்தியா’ கூட்டணி கட்சித் தலைவர்கள் ஒருமனதாக மேற்கொண்டனர்.*

*இதையடுத்து நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆவணங்கள் தயாரிக்கும் பணியை காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மேற்கொண்டனர்.*

*அதன்பிறகு சோனியா காந்தி தலைமையில் காங்கிரஸ் எம்.பி.க்கள் ஆலோசனை நடத்தினார்கள்.*

*இதையடுத்து நாடாளுமன்ற காங்கிரஸ் துணை தலைவரும், அசாம் மாநில எம்.பி.யுமான கவுரவ் கோகாய் மக்களவை அலுவலகத்துக்கு சென்றார். அங்கு அவர் மக்களவை செயலாளரிடம் ஒன்றிய அரசுக்கு நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான கடிதங்களை ஒப்படைத்தார்.*

*இதனையடுத்து மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் ஏற்கப்படுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். அனைத்துக் கட்சி தலைவர்களிடம் ஆலோசித்து விவாதத்திற்கான தேதி அறிவிக்கப்படும் என்றார்.*

*இந்நிலையில் நாடாளுமன்ற இரு அவைகளும் நேற்று கூடியதும் மணிப்பூர் சம்பவம் குறித்து விவாதித்திட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் நேற்று முழுவதும் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன.*

### எங்கள் அணியும் ‘இந்தியா’ அணிதான்! அதன் வெற்றிக்காகவே நாங்கள் ‘டீம்’ ஸ்பிரிட்டுடன் பாடுபடுகிறோம்!

# உதயநிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு - தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறைக்குப் புத்துணர்வு!

## ‘முதலமைச்சர் கோப்பை - 2023’ நிறைவு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூலை 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை - 2023” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரையாற்றுகையில், “தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சராக உதயநிதி பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறை புத்துணர்வு பெற்றுள்ளது” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், “எங்கள் அணியும் ‘இந்தியா’ அணிதான்! அதன் வெற்றிக் காகத்தான் நாங்களும் ஒருங்கிணைந்து - ‘டீம்’ ஸ்பிரிட்டுடன் பாடுபடுகிறோம்!” என்று குறிப்பிட்டார்.**

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இவ்விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-*

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கிப் பாராட்டக் கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கக்கூடிய இந்த துறையின் அமைச்சர் உதயநிதி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

‘விளையாட்டுப் பிள்ளையாக இருக்கிறாரே!’ என்று வளர்ந்த பிள்ளையைப் பார்த்து சில பெற்றோர் நினைப்பதுண்டு. விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக நம் பிள்ளை சிறப்பாகச் செயல்படுகிறார் என்று பெற்றவனை மகிழ வைக்கக்கூடியவராக உதயநிதி இருக்கிறார்.

**பெற்றவனை மகிழ வைத்த பிள்ளை!**

“விளையாட்டைப் பார்ப்பவர்களுக்குக் களிப்பாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளை நடத்துபவர்களும், அந்தப் போட்டிகளில் விளையாடுபவர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

இந்த நிகழ்வை மிகப் பொறுப்பாக நடத்தியிருக்கும் விளையாட்டுத் துறைச் செயலருக்கும், உறுப்பினர் செயலர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2023) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற ”முதலமைச்சர் கோப்பை – 2023 மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், 27–வது தேசிய மகளிர் கால்பந்து போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு அணியை சார்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.